உ
சிவமயம்



சுண்ணுகம்—தெற்கு வாசகரும் ஊத்தமசைவ வேளாள குலத்தவவும் சோமநாத தம்பதிகளின் அருந்தவப் புதல்வியும் மலேசிய நீதிமன்ற செயலாளர் (ஓய்வுபெற்ற) சின்னத்தம்பி நவரத்தினத்தின் அன்பு பாரியாராகிய

# திருமதி. ந. தங்கமுத்து

அவர்களின்

# நினைவு மலர்

## 1980

சித்திரா அச்சகம் 310, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சுண்ணுகம்—தெற்கு

# ஸ்ரீமதி ந. தங்கமுத்து அம்மையாரின்
# வாழ்க்கை வரலாறு

சிவபூமி என்னும் சிறப்பு பெற்ற ஈழவள நாட்டின் வடபாலிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடு போற்றும் பாவலரும் நாவலருமாகிய சான்ருேர்கள் தோன்றத் தவஞ்செய்த சீருடைய பதி சுண்ணுகம் அப்பதியில் இருமரபுத் தூய உத்தம வேளாளர் குலத்திலே உதித்து வேளாண்மையை மேற் கொண்டு சீலந் தவருது சுகுணராய் வாழ்ந்த தூயவர் திருவாளர் சோமனுதர் என்பவர் அவர் தம்மரபோடொத்த தகவுடையராகி உடுவிலேப் பிறப்பிடமாகக் கொண்ட பறுவதிப்பிள்ளே என்பவரை மணந்து மனேயறத்தை மாண்புற நடத்தி வந்தார். அந்த. அம்மையாருக்கு பதிவிரதா தருமந் தவருது கருத்தொருமித்த அந்த அம்மையாரும் பதிவிரதா தருமந் தவருது கருத்தொருமித்து அன்புடன் அறத்துறைபேணி; இனிய வாழ்க்கை துணேவியாக இருந்து தவித்தார் இவ்வாழ்வின் பயனுக மனேக்கு விளக்காகும் மாண்புடைய ஒரு பெண்மகவை வயிறுவாய்த்து நல்கினுர் அவ்வளவில் அவர் நிலேயாமை ஏதுவாக நிலவுலகை நீத்து விண்ணவர்க்கு விருந்தாக நன்னினுர்.

சீலம்திறம்பாத ஏகபத்தினிவிரதரான சோமநாதராகிய அச்சான்ருேர் மறுமணம் மறுத்தவராய் அருமையான ஒரே மகவுக்குத் தங்கமுத்து என நாமம் புனேந்து சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார் மகளுக்குத் தாமே தாயுமானுர் தந்தையுமானுர் குருவுமானுர். இப்படி எல்லோரும் தாமாக இருந்து கல்வி ஒழுக்கம் பண்பு ஆகிய எல்லாவற்றையும் வளர்த்து மணப்பருவமடையச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் தங்குலத்துக்கு ஒத்த குலத்தவராய் விளங்கிய மாண்புடைய சின்னத்தம்பி கதிராசிப்பிள்ளை தம்பதியரின் செயலானக் (சக்கடத்தாராக) கடமை புரிந்திருந்த திருவாளர் நவரத்தினம் அவர்களை மணம் புரிந்து வைத்தார்.

புதுமணத்தம்பதியரான நவரத்தினமும் தங்கமுத்து அவர்களும் சிலநாளின் பின் மலேசியா சென்று மனை வாழ்வை மாண்புற நடாத்தி வந்தனர். கணவன் கருத்தறிந்து வாழும் காதல் மனைவியாகப் பொருந்தி இனிது சிலகாலம் வாழ்ந்தபின் திரு நவரத்தினம் அவர்கள் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுப் பிறந்தகம் வந்து சேர்ந்தார்.

இங்கே சுண்ணாகத்தில் அமைத்த தங்கள் இல்லத்தில் இருந்து உறவினர்க்கும் ஊரவர்க்கும் ஊருணி போல உதவி உயர் புகழ் தழைக்க வாழ்ந்து வந்தனர். அவர் பெற்றெடுத்த பிள்ளைகளாவன.

திருமதி. செல்வரத்தினம் கனகசபை (இராசா) —வைத்தியர்
செல்வன் முத்துக்குமாரு (இளமையில் காலமானார்)
திருமதி. சரஸ்வதி சம்பிமுத்து —ஆசிரியர்
திருமதி. இராசம்மா சோமசுந்தரம் —கிராமசேவகர்
திருமதி. சிவபாக்கியம் இராசையா —மலேசிய எஸ்ரேற் நடத்துனர்
செல்வன். வேலாயுதம் (இளமையில் காலமானார்)

இப்பிள்ளைகளை இளமையிற்கல்வி பயில்வித்தும் நல்லொழுக்க நெறியில் நடத்தியும் உரிய காலங்களில் அவர்களுக்கு ஏற்ற வரன்களை நாடி மணம் செய்வித்து மனையற வாழ்வில் ஈடுபடுத்தியும் அவர்கள் மூலம் பௌத்திரர் பலரைக் கண்டும் அவர்களுக்கும் தமது கையால் அருக்கலங்கள் பூட்டி அழகு பார்த்தும் பேரப் பிள்ளைகளிலே பருவமடைந்தவர்கள் இல்வாழ்கைச் சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்தச் செய்தும் அவர்கள் மூலம் பீட்டப்பிள்ளைகள் பலரைக் கண்டும் அவர்களுக்கும் தாம் சில சீர்சிறப் புகள் தந்தும் இப்படித்தம்வமிசம் தழைத்துச் சிறப் புற்றிருக்கும் நலங்கண்டு நன்மன நிறைவோடு நீடு வாழ்ந்திருந்தார்.

தம்மை அருமையாகப் பேணிவளர்த்த தந்தை யார் திருவாளர் சோமநாதர் அவர்கள் நூறுண்டு வாழ்ந்தவரை நோவுறுது போற்றி ஆவன செய்து அவரது ஆவிபிரிந்தபின் அவருக்கு தங்கணவரே சகல அந்தியக்கடன்களும் செய்து முடிக்கச் செய்தார் சில ஆண்டுகளின்முன் தம் கணவர் திரு. நவரத்தினம் நோய் வாய்ப்பட்டிருந்த காலை அவரையும் தக்கவாறு பராம ரித்து அவர் காலமானபோது அவருக்குரிய கடன்களை மூத்த மருமகனைக்கொண்டு செய்வித்தார் தந்தையைப் போலவே தாமும் நூறுண்டு பூரண வாழ்வு வாழ்ந்தார்.

தந்தை வழிக் குல தெய்வங்களான கதிரமலைச் சிவனுக்கும் பூதராயருக்கும் தாய்வழிக்குல தெய்வமான உடுவில் அம்மன் கோவிலுக்கும் காலந்தோறும் தம் முன்னோர் செய்து வந்த பூசை விழாக்களையும் செய்து வந்தார். தமது ஒரே மகன் மறைந்த கார்த்திகைத் தீபத் திருநாளில் நல்லை வேலருக்கு அபிஷேகம் மாவி ளக்கிடுதலாகிய கடமையையும் ஆண்டுதோறும் நடத் தினர்.

இங்ஙன மெல்லாம் இல்வாழ்வர்க்குரிய இயல் பிலே தெய்வமும் விருந்தும் ஒக்கலும் தென்புலத்தா ரும் ஆகிய துறை தோறும் தெய்ய வேண்டிய கடன் களை வழுவாதாற்றி வாழ்வாங்கு பூரண ஆயுளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த தங்கமுத்து அம்மையார் தெய்வநியதியின் வழியே இரௌத்திரி வருடம் ஆடிமாதம் 21ம் திகதி (12-8-80) செவ்வாய்கிழமையும் கார்த்திகை நாளும் பொருந்திய அபரபக்க தசமித்திதியில் பூத உடலைத் துறந்து இறைவனடி நிழலிலே இறவாத இன்ப அன்பு நிலையில் சாந்தி எய்தினர்.

அவரது ஆத்மா நித்த சுத்த சாந்தியில் நீடு நிலவ அருளுமாறு எல்லாம் வல்ல ஈசனை ஏத்துவோம்.

சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**அமரர் நவரத்தினம் தங்கமுத்து அவர்களின்**

இறுதியாத்திரை, அந்தியேட்டி, சபிண்டி ஆகிய சடங்குகளில் கலந்து கொண்ட உறவினர்களுக்கும் உற்றூர்களுக்கும் அன்பர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பிய அனுதாபிகட்கும் எமது உள்ளம் கனிந்த நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org